**அக்டோபர் – 13**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் முதல் வணிகப் பயன்பாட்டு மின்சார சரக்குந்து மின்கல மாற்றுதல் மற்றும் மின்னேற்ற நிலையமானது ஹரியானாவின் சோனிபட்டில் திறக்கப்பட்டது.
- மும்பை ஒன் என்பது நிகழ்நேரத் தகவல் புதுப்பிப்புகள், கைபேசி வழி பயணச் சீட்டுகள் மற்றும் மெட்ரோ, இரயில் மற்றும் பேருந்துகளுக்கான ஒற்றை டிஜிட்டல் நுழைவு மூலம் 11 பொதுப் போக்குவரத்து அமைப்புகளில் முன்பதிவு செய்ய உதவும் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்தப் போக்குவரத்து செயலியாகும்.
- ஷெர்ரி சிங் பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற திருமதி பிரபஞ்சப் பேரழகி 2025 போட்டியில் இந்தியப் போட்டியாளர் வெற்றி பெற்றதுடன் இந்தியா தனது முதல் வெற்றியை இதில் பெற்றது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சாதி அடிப்படையிலான பொது இடங்களை மறுபெயரிடுதல்




- சாதி அடிப்படையிலான அல்லது பாகுபாடான பெயர்களைக் கொண்ட இடங்களை அடையாளம் கண்டு மறுபெயரிடுவதற்கான வழிகாட்டுதல்களை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.
- அதிகாரப்பூர்வ ஆவணங்களிலிருந்து "காலனி" என்ற சொல்லினை நீக்குவதற்கான முதலமைச்சரின் சட்டசபை அறிவிப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது.
- ஆதி திராவிடர் காலனி, ஹரிஜன் காலனி, வண்ணாங்குளம், பறையர் தெரு மற்றும்

சக்கிலியர் சாலை போன்ற பெயர்கள் நடுநிலையான மாற்றுப் பெயர்களுடன் மறு பெயரிடப் பட உள்ளன.

❖ இந்த மாற்றங்களை மேற்கொள்வதற்கு முன்னதாக கிராம சபை மற்றும் பகுதி சபையின் ஒப்புதல்கள் தேவையாகும்; பழையப் பெயர்களே தக்க வைக்கப்பட்டால் அதற்கான சரியான காரணங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

❖ தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 ஆகியவற்றின் படி மாநில அரசினால் இறுதி முடிவுகள் எடுக்கப் படும்.

❖ வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் உள்ள வருவாய் கிராமங்களில் இருந்து சாதிப் பெயர்களை நீக்குவதற்கு இதே போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உத்தரவிடப்பட்டுள்ளன.

## காணொளி வாயிலான கிராம சபைக் கூட்டங்கள்

❖ தமிழ்நாடு முதலமைச்சர் சுமார் 10,000 கிராம சபைக் கூட்டங்களில் காணொளி வாயிலாக உரையாற்றினார்.

❖ "நம்ம ஊரு, நம்ம அரசு" (நமது கிராமம், நமது அரசு) என்ற கருத்துருவில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

❖ முதல்வரின் உரையாற்றலுக்குப் பிறகு, கிராம சபைகள் 16 பட்டியலிடப்பட்ட தலைப்புகளைப் பற்றி விவாதித்து, முதல் மூன்று உள்ளூர் தேவைகள் குறித்த தீர்மானங்களை நிறைவேற்றின.

❖ மறுபுறம், தமிழ்நாட்டில் 25 நகராட்சிகள், 145 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளில் மொத்தம் 12,838 வார்டுகள் உள்ளன.




# தேசியச் செய்திகள்

## செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டுத் திட்டம்

❖ நிதி ஆயோக் அமைப்பானது, புது டெல்லியில் "AI for Inclusive Societal Development" என்ற

கருத்துருவில் ஒரு செயல் திட்டத்தினை வெளியிட்டது.

- செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் வளர்ந்து வரும் புதியத் தொழில்நுட்பங்கள் இந்தியாவின் 490 மில்லியன் முறைசாரா தொழிலாளர்களுக்கு எவ்வாறு ஆதரவளிக்க முடியும் என்பதில் இந்த ஆய்வு கவனம் செலுத்துகிறது.
- முறைசாரா துறையானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 50 சதவீதத்தைப் பங்களிக்கிறது என்றாலும், அத்துறையில் முறையான பாதுகாப்பு மற்றும் வாய்ப்புகள் இல்லை.
- முறைசாரா தொழிலாளர்களுக்கு உள்ளடக்கிய வகையிலான செயற்கை நுண்ணறிவு சூழல் அமைப்பை உருவாக்க டிஜிட்டல் ஷ்ராம்சேது என்ற தேசியத் திட்டத்தினை நிதி ஆயோக் முன்மொழிந்தது.
- நிதியியல் பாதுகாப்பின்மை மற்றும் திறன் இல்லாமை போன்ற சவால்களை எதிர் கொள்வதற்காக இந்தத் திட்டமானது செயற்கை நுண்ணறிவு, தொடர் சங்கிலித் தொழில் நுட்பம் மற்றும் அதிவேகத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும்.
- திட்ட அமலாக்கம் இல்லாமல், முறைசாரா தொழிலாளர்களின் சராசரி வருடாந்திர வருமானம் ஆனது 2047 ஆம் ஆண்டில், 14,500 டாலர் என்ற அதிகபட்ச வருமான வரம்பிற்கு கீழே 6,000 டாலராக இருக்கும்.




## தொழிலாளர் கொள்கை 2025 வரைவு

- தொழிலாளர் அமைச்சகமானது, தேசியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை வரைவை (ஷ்ரம் சக்தி நிதி 2025) வெளியிட்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து தொழிலாளர்களுக்கும் பொதுவான, எளிதில் மாற்றக்கூடிய சமூகப் பாதுகாப்புக் கணக்குகளை உருவாக்குவதே இதன் நோக்கம் ஆகும்.
- இது EPFO, ESIC, PM-JAY (பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா), e-SHRAM மற்றும் மாநில நல வாரியங்களை ஒருங்கிணைக்க முன்மொழிகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பெண்களின் தொழிலாளர் வளப் பங்கேற்பை 35 சதவீதமாக உயர்த்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொள்கையானது, MSME நிறுவனங்களுக்கான எளிமைப்படுத்தப்பட்ட வருமானம் மற்றும் சுயச் சான்றளிப்புடன் கூடிய ஒற்றைச் சாளர டிஜிட்டல் இணக்கத் தளத்தை அறிமுகப்படுத்துகிறது.
- இது செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் தொழிலாளர் நிர்வாகம், ஆபத்து அடிப்படையிலான ஆய்வுகள் மற்றும் பாலினம் அடிப்படையிலான பாதுகாப்புத் தரநிலைகளில் கவனம் செலுத்துகிறது.
- தொடக்கம், கண்காணிப்பு மற்றும் கொள்கை புதுப்பித்தல் ஆகியவை உள்ளிட்ட

இந்தக் கொள்கை ஆனது 2025 முதல் 2030 ஆம் ஆண்டிற்கு அப்பாலான காலக் கட்டம் வரையில் மூன்று கட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- முகப்புப் பக்கங்கள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை மதிப்பீட்டுக் குறியீடு (LPEI) மற்றும் பாராளுமன்றத்திற்கான வருடாந்திர அறிக்கைகள் மூலம் இதன் முன்னேற்றம் கண்காணிக்கப்படும்.





# சர்வதேசச் செய்திகள்

## உலகின் மிகப்பெரிய மின்சார மூலம்

- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியானது முதல் முறையாக நிலக்கரியை விஞ்சி, உலகின் முன்னணி மின்சார உற்பத்திக்கான மூலமாக மாறியது.
- சூரிய மற்றும் காற்றாலை மின்சாரம் ஆனது, நிலக்கரி மற்றும் எரிவாயு பயன்பாட்டில் சிறிது சரிவை ஏற்படுத்தி, உலகளாவிய மின்சாரத் தேவை வளர்ச்சியில் 100 சதவீதத்தினைப் பூர்த்தி செய்தது.
- உலகின் பிற பகுதிகளை விட அதிக சூரிய மற்றும் காற்றாலை உற்பத்தியை உருவாக்கி, அதன் புதைபடிவ எரிபொருள் உற்பத்தியை 2% குறைத்ததுடன், சீனா தூய்மையான எரிசக்தி விரிவாக்கத்தில் முன்னிலை வகித்தது.
- இந்தியாவும் குறிப்பிடத்தக்க சூரிய மற்றும் காற்றாலை உற்பத்தியை மேற்கொண்டு, மெதுவான தேவை வளர்ச்சியை ஈடுசெய்து, நிலக்கரி மற்றும் எரிவாயுப் பயன்பாட்டைக் குறைத்தது.
- இதற்கு நேர்மாறாக, அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பலவீனமான தூய்மையான எரிசக்தி வளர்ச்சி மற்றும் மோசமான காற்று மற்றும் நீர் உற்பத்தி காரணமாக புதைபடிவ எரிபொருள்களை சார்ந்திருக்கும் நிலையை அதிகரித்தன.
- கொள்கை மாற்றங்கள் காரணமாக சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA) 2030 ஆம் ஆண்டிற்கான அதன் அமெரிக்க புதுப்பிக்கத்தக்க திறன் கணிப்பை 500 GW திறனிலிருந்து 250 GW ஆக பாதியாகக் குறைத்தது.
- 1975 ஆம் ஆண்டு முதல் சூரிய சக்தி விலைகள் 99.9% குறைந்துள்ளன என்பதோடு இது வளர்ந்து வரும் நாடுகளில், மிகவும் குறிப்பாக ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியாவில் விரைவான சூரிய சக்தி ஏற்பிற்கு வழி வகுத்தது.
- 2024 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் நாடானது சூரிய சக்தி இறக்குமதியை

இரட்டிப்பாக்கியது.

- சூரிய சக்தி திறனில் நைஜீரியா எகிப்தை முந்தியது என்பதோடு மேலும் சாம்பியா மற்றும் அல்ஜீரியா போன்ற நாடுகளும் அதிவேக வளர்ச்சியைக் கண்டன.
- விரைவான சூரிய சக்தி விரிவாக்கம் ஆனது புதிய சவால்களை ஏற்படுத்துகிறது, அதாவது ஆப்கானிஸ்தானில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றிகள் பயன்பாடானது நிலத்தடி நீர் மட்டங்களைக் குறைக்கின்றன.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 20 பில்லியன் டாலரை எட்டிய சீனா, மின்சார வாகனங்கள் மற்றும் மின் கலன்கள் துறையில் முன்னிலை வகிப்பதுடன் தூய்மையான தொழில்நுட்ப ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் உலகளாவியப் பங்குதாரராக திகழ்கிறது.




## அமெரிக்காவுடனான ரஷ்யாவின் புளூட்டோனியம் ஒப்பந்தம் ரத்து




- 2000 ஆம் ஆண்டில் அமெரிக்காவுடன் கையெழுத்திடப்பட்ட புளூட்டோனியம் மேலாண்மை மற்றும் இடமாற்ற ஒப்பந்தத்திலிருந்து (PMDA) விலகுவதற்கு ரஷ்யாவின் நாடாளுமன்றத்தின் கீழவை ஒப்புதல் அளித்தது.
- PMDA ஆனது இரு நாடுகளும் தலா 34 டன் (சுமார் 17,000 அணு ஆயுதங்களை உருவாக்கப் போதுமானது) ஆயுதத் தரப் பயன்பாட்டிற்கான புளூட்டோனியத்தினை அப்புறப்படுத்த வேண்டும் என்று கோரியது.

- இந்த ஒப்பந்தம் ஆனது 2011 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- புளூட்டோனியத்தினை கலப்பு ஆக்சைடு (MOX) எரிபொருளாக மாற்றுவதன் மூலமோ அல்லது உலைகளில் கதிர்வீச்சு நீக்கம் செய்வதன் மூலமோ அதன் பரவல் அபாயங்களைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டது.
- அமெரிக்கத் தடைகள், நேட்டோ விரிவாக்கம் மற்றும் அமெரிக்க புளூட்டோனியம் அகற்றும் முறைகளில் ஒருதலைபட்ச மாற்றங்கள் ஆகியவற்றைக் காரணம் காட்டி, ரஷ்யா 2016 ஆம் ஆண்டில் அதன் செயல்படுத்தலை நிறுத்தியது.
- ரஷ்யாவும் அமெரிக்காவும் இன்றும் 8,000 அணு ஆயுதங்களை வைத்து இருக்கின்றன, என்ற நிலையில் இது 1986 ஆம் ஆண்டில் 73,000 ஆக இருந்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## டிஜிட்டல் நாணயத்திற்கான சில்லறை கட்டமைப்பு




- இந்திய ரிசர்வ் வங்கியானது அதன் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்திற்கான சில்லறை கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இணைய வழி ரூபாய் என்று அழைக்கப்படுகின்ற டிஜிட்டல் நாணயம் ஆனது மத்திய வங்கி டிஜிட்டல் நாணய (CBDC) சோதனைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- சில்லறை CBDC சோதனைத் திட்டமானது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று தொடங்கியது, மேலும் இது இந்தியாவில் சுமார் 7 மில்லியன் பயனர்களைச் சென்று அடைந்துள்ளது.
- கட்டமைப்பு/சாண்ட்பாக்ஸ் ஆனது நிதித் தொழில்நுட்ப (ஃபின்டெக்) நிறுவனங்கள் இணைய வழி ரூபாயைப் பயன்படுத்தி தீர்வுகளை உருவாக்கி அதனைப் பரிசோதிக்க அனுமதிக்கிறது.
- பாதுகாப்பான மற்றும் திறம் மிக்கப் பரிவர்த்தனைகளுக்காக உண்மையான வங்கி வைப்புகளை டிஜிட்டல் குறியீடுகளாக மாற்ற குறியாக்கம் பயன்படுத்தப்படுகிறது.


## டிஜிட்டல் முறை வங்கி உத்தரவாதங்கள்

- மின்னணு வங்கி உத்தரவாதங்களின் (e-BGs) நிகழ்நேர டிஜிட்டல் செயல்படுத்தலைச் செயல்படுத்துவதற்கு இந்தியா ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- DigiLocker தளத்தின் ஒரு பகுதியான NeGD பிரிவின் நிறுவனக் காப்பு ஆனது, NeSL பிரிவின் டிஜிட்டல் ஆவண செயலாக்க அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படும்.
- இந்த அமைப்பானது, விண்ணப்பதாரர்கள் மற்றும் பயனாளிகள் ஒரு மையக்

களஞ்சியத்தின் மூலம் வங்கி உத்தரவாதங்களை டிஜிட்டல் முறையில் அணுக அனுமதிக்கிறது.

❖ e-BG ஆனது சேதப்படுத்த முடியாதவை, சட்டப்பூர்வமாக செல்லுபடியாகக் கூடியவை மற்றும் பல நாட்களுக்குப் பதிலாக சில நிமிடங்களுக்குள்ளேயே வழங்கப்படக் கூடியவை.

❖ இந்த அமைப்பானது, வங்கி உத்தரவாதங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் கோருதல் உள்ளிட்ட முழு டிஜிட்டல் செயலாக்கத்தை ஆதரிக்கிறது.




## வெளிநாட்டுப் பண மதிப்பிலான தீர்வு அமைப்பு




❖ நிதியமைச்சர் குஜராத்தின் GIFT நகரில் ஒரு வெளிநாட்டுப் பண மதிப்பிலான தீர்வு முறையை (FCSS) தொடங்கி வைத்தார்.

❖ இந்த அமைப்பு ஆனது, சர்வதேச நிதிச் சேவைகள் மையத்திற்குள் (IFSC) வெளிநாட்டுப் பண மதிப்பிலான பரிவர்த்தனைகளின் நிகழ்நேர அல்லது பகுதியளவு நிகழ்நேரத் தீர்வைச் செயல்படுத்துகிறது.

- FCSS ஆனது தற்போது தொடர்புடைய வங்கி மூலம் கையாளப்படும் பன்னாட்டுக் கொடுப்பனவுகளில் பல இடைத்தரகர்களைச் சார்ந்திருக்கும் நிலையை நீக்குகிறது.
- இந்தப் புதிய அமைப்பின் கீழ் அமெரிக்க டாலர் அனுமதியைக் கையாள ஸ்டாண்டர்ட் சார்ட்டர்டு வங்கியின் இந்தியப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இணக்கம் மற்றும் செயல்பாட்டு மேற்பார்வையை உறுதி செய்வதற்காக பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டத்தின் கீழ் இந்த FCSS ஒழுங்குபடுத்தப் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## சாக்சம் ஆளில்லா வான்வழி வாகன எதிர்ப்பு அமைப்பு




- நிகழ்நேர ஆளில்லா வான்வழி வாகன அச்சுறுத்தல்களை நடுநிலைப் படுத்தச் செய்வதற்காக இந்திய இராணுவமானது, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சாக்சம் ஆளில்லா வான்வழி வாகன அமைப்பின் (CUAS) கட்டமைப்பினை உட்சேர்த்துள்ளது.
- காசியாபாத்தில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்துடன் இணைந்து சாக்சம் உருவாக்கப்பட்டது என்பதோடு இது பாதுகாப்பான இராணுவத் தரவு வலையமைப்பில் (ADN) செயல்படுகிறது.
- இந்த அமைப்பு ஆனது உத்திசார் போர்க்கள அமைப்பில் (TBS) முழுமையாக நிகழ்நேர கட்டமைப்பில் எதிரி நாட்டு ஆளில்லா விமானங்கள் மற்றும் ஆளில்லா வான்வழி அமைப்புகளைக் கண்டறிந்து, கண்காணித்து, அடையாளம் காட்டி, எதிர்க்கிறது.
- இது நிகழ்நேர அச்சுறுத்தலைக் கண்டறிதல், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முன்கணிப்புப் பகுப்பாய்வு மற்றும் படை வீரர்களுக்கு தானியங்கி முடிவு வழங்கீட்டு ஆதரவை வழங்குகிறது.
- இது CUAS உணர்வுக் கருவிகள் மற்றும் ஆயுதங்களை ஒருங்கிணைக்கிறது, மேலும் முப்பரிமாண போர்க்களக் காட்சிப்படுத்தலை செயல்படுத்தி, ஆகாஷ்தீர் வான்வழிப் பாதுகாப்பு அமைப்புடன் உள்ளீடுகளை ஒத்திசைக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சூரிய ஒளி பரவலின் நேரக் குறைவு




- சமீபத்திய ஆய்வில் 1988 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் வருடாந்திர சூரிய ஒளிப் பரவல் நேரங்கள் தொடர்ந்து குறைந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் (BHU), இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (IITM) மற்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) ஆகியவற்றின் அறிவியலாளர்களால் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.
- 9 பிராந்தியங்களில் உள்ள 20 வானிலை நிலையங்களில் 1988 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான தரவுகள் சூரிய ஒளி பரவல் நேரக் குறைவை காட்டின.
- 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் அதிகரித்த புதைபடிவ எரிபொருள் பயன்பாடு ஆகியவற்றால் ஏற்படும் தூசிப்படல / ஏரோசல் அளவுகள் அதிகரிப்பே இந்தச் சரிவுக்குக் காரணமாகும்.
- வடகிழக்கு பிராந்தியத்தில் சில பருவகால சமநிலை பதிவானாலும், மற்ற பகுதிகளில் குறிப்பாக ஜூன் முதல் ஜூலை வரை குறிப்பிடத்தக்க சூரிய ஒளி உமிழ்வு நேரத்தில் வீழ்ச்சிகள் பதிவாகின.
- ஏரோசோல்கள் சிறிய, நீண்ட காலம் காணப்படும் நீர்த்துளிகளை உருவாக்குவதன் மூலம் சூரியக் கதிர்வீச்சு நிலப்பரப்பினை அடைவதைக் குறைக்கின்ற மேகப் பரவலை அதிகரிக்கின்றன.
- ஏரோசோல்களால் தீவிரப்படுத்தப்பட்ட மேகமூட்டம் போன்ற வானிலை காரணிகளும் இந்தியாவில் சூரிய ஒளிப் பரவலைக் குறைக்க பங்களிக்கின்றன.

## இராட்சத பூஞ்சை இனங்கள்

- அருணாச்சல பிரதேசத்தில் பிரிட்ஜிபோரஸ் கனடி என்ற புதியதான பூஞ்சை இனம் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்தப் பூஞ்சை 3 மீட்டருக்கும் அதிகமான ஆரம் கொண்ட மிகப்பெரிய செல் திரட்டல் அமைப்பினைக் கொண்டுள்ளது.
- இந்தியத் தாவரவியல் ஆய்வு நிறுவனத்தின் காளான் கணக்கெடுப்பின் போது இது பழைய, இறந்த தேவதாரு மரங்களில் வளர்வது கண்டறியப்பட்டது.
- இந்தப் பூஞ்சைகள் மரத்தைச் சிதைத்து கார்பன் மற்றும் ஊட்டச்சத்து சுழற்சிக்கு உதவுவதன் மூலம் காடுகளின் ஆரோக்கியத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.




## இந்தியாவின் தேசிய செந்நிறப் பட்டியல் மதிப்பீட்டு முன்னெடுப்பு




- ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரமான அபுதாபியில் நடைபெற்ற IUCN உலகப் பாதுகாப்பு மாநாட்டில் இந்தியா பங்கேற்றது.
- உயிரியல் பன்முகத் தன்மை உடன்படிக்கை (CBD) மற்றும் குன்மிங்-மாண்ட்ரியல் உலகளாவியப் பல்லுயிர் கட்டமைப்பு (KMGBF) ஆகியவற்றின் கீழான கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு தேசிய செந்நிறப் பட்டியல் மதிப்பீட்டு முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- தேசிய அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட, அறிவியல் அடிப்படையிலான அமைப்பு மூலம் உயிரினங்களின் பாதுகாப்பு நிலையை மதிப்பிடுவதற்கான ஒரு கட்டமைப்பு

உருவாக்கப்பட்டது.

- IUCN உலகளாவியத் தரநிலைகளைப் பின்பற்றி, 2030 ஆம் ஆண்டிற்குள் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கான தேசிய செந்நிற தரவுப் புத்தகங்களை வெளியிடுவதே இதன் குறிக்கோள் ஆகும்.
- இந்த முன்னெடுப்பானது துல்லியமான இனங்கள் மதிப்பீட்டின் அடிப்படையில் வளங் காப்புத் திட்டமிடல், அச்சுறுத்தல் குறைப்பு மற்றும் தகவலறிந்த கொள்கை மேம்பாட்டை ஆதரிக்கிறது.
- நான்கு உலகளாவியப் பல்லுயிர்ப் பெருக்க இடங்களைக் கொண்டுள்ள இந்தியா உலகளாவிய தாவரங்களில் 8% மற்றும் 7.5% விலங்கினங்களைக் கொண்டுள்ளது என்ற நிலையில் இதில் உள்ளூர் இனங்கள் அதிக சதவீதத்தில் உள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## THE இதழின் உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2026




- ஐக்கியப் பேரரசில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆனது பத்தாவது ஆண்டாக உலகளவில் முதலிடத்தைப் பிடித்தது.
- அமெரிக்காவில் உள்ள ஏழு பல்கலைக்கழகங்கள் முதல் பத்து இடங்களில் இடம் பெற்றுள்ளன ஆனால் கடந்த ஆண்டை விட முதல் 100 இடங்களில் குறைவாகவே உள்ளன.
- அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் ஆனது மற்ற இரு பல்கலைக் கழகங்களுடன் சேர்த்து மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- சிங்குவா பல்கலைக்கழகம் (12), பீக்கிங் பல்கலைக்கழகம் (13), மற்றும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் (17) ஆகியவை கடந்த ஆண்டில் இருந்த அவற்றின் அதே தர வரிசைகளைத் தக்க வைத்துக் கொண்டன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## T.T. ஜெகநாதனின் மறைவு

- T.T.K. பிரெஸ்டீஜ் நிறுவனத்தின் கௌரவத் தலைவர் T.T. ஜெகநாதன் பெங்களூருவில்

காலமானார்.

- அழுத்த சமையற் கலம் / பிரஷர் குக்கர் விபத்துகளைத் தடுத்து, அந்நிறுவனத்தை மீண்டும் புத்தாக்கம் பெறச் செய்ய உதவிய கேஸ்கெட் வெளியீட்டு முறை என்ற ஒரு பாதுகாப்பு அம்சத்தினை அவர் கண்டுபிடித்தார்.
- அவர் அந்த நிறுவனத்தின் திவால் நிலையிலிருந்து அதன் வெற்றிக்கான பயணத்தை ஆவணப் படுத்தி, Disrupt and Conquer என்ற புத்தகத்தை எழுதினார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★